**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.**

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி , ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.223/2025 இன் அ.வ.எண்.31/2017

ராஜேந்திரன் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

ராமமூர்த்தி ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனு கடந்த 17.11.2025 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.செல்வகுமார் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.சேகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

இந்திய முத்திரை சட்டம், பிரிவு 33 மற்றும் பாரதிய நாகரிக் பாதுகாப்பு சட்டம் பிரிவு 109-ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

அசல் வழக்கு விசாரணைக்காக தற்போது நிலுவையில் உள்ளதாகவும்,

வழக்கிற்கு ஆதரவாக தனது தரப்பு ஆவணம் பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளதாகவும், 13.09.1948 ல் தனது தந்தை மற்றும் அவரது சகோதரர்களுக்குள் எழுதப்பட்டடதாகவும், ஆனால் அது பதிவு செய்யப்படவில்லை என்றும், அதற்கு பதிவு கட்டணம் செலுத்த தயாராக உள்ளதாகவும், 13.09.1948 தேதியிட்ட பத்திரத்தை impound செய்து சட்ட நடைமுறைப்படி ஸ்டாம்ப் தொகையை நிர்ணயம் செய்யும் பொருட்டு மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், தனது 13.09.1948 தேதியிட்ட ஆவணத்திற்கு ஸ்டாம்ப் தொகை கணக்கிட்டு அறிவிக்கவில்லையெனில் தனது தரப்பு சான்றாவணமாக இந்த ஆவணத்தை தான் குறியீடு செய்ய இயலாது என்றும், அப்படி இயலாமல் போனால் தனக்கு பெருத்த கஷ்டமும், ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும் என்றும், எனவே தனது மனுவை ஏற்று தனது 13.09.1948 தேதியிட்ட ஆவணத்தை impound செய்ய மேல்வடிக்கை எடுத்து உத்திரவிட வேண்டப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.09.1948 தேதியிட்ட ஆவணமானது பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் என்றும், ஆதாரமாக ஏற்றக்கொள்ள தக்கது அல்ல என்றும், ஸ்டாம்ப் டியூட்டி மற்றும் அபராதம், பத்திரம் பதிவு செய்யப்படாததை சரிசெய்ய இயலாது என்றும், மனு நிலைக்கதக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்ய

வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய மற்றும் சான்றாவணம் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள காலதாமத மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனத்திற்காக தற்போது நிலுவையில் உள்ளது. மனுவில் வழக்கிற்கு ஆதரவாக 13.09.1948 ல் தனது தந்தை மற்றும் அவரது சகோதரர்களுக்குள் எழுதப்பட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளதாகவும், அதற்கு பதிவு கட்டணம் செலுத்த தயாராக உள்ளதாகவும், 13.09.1948 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை impound செய்து சட்ட நடைமுறைப்படி ஸ்டாம்ப் தொகையை நிர்ணயம் செய்யுவும், முத்திரை கட்டணம் செலுத்த தயாராக உள்ளதா குறிப்பிட்டுள்ள நிலையில், **மாறாக** , 13.09.1948 தேதியிட்ட ஆவணமானது பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் என்றும், ஸ்டாம்ப் டியூட்டி மற்றும் அபராதம், பத்திரம் பதிவு செய்யப்படாததை சரிசெய்ய இயலாது என்றும், ஆட்சிபிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு பார்க்கும்போது பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம் ஆவணமானது துணை நோக்கங்களுக்காக மட்டுமே குறியீடு செய்யப்படலாம். மேலும், வழக்கிற்கு மேற்சொன்ன பாகபிரிவினை பத்திரம் தொடர்புடையது என்ற அடிப்படையில்தான் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதால் அவர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டும் என்ற கூற்று ஏற்றுக்கொள்ளும் படியாக உள்ளது. மேற்படி ஆவணத்தை மதிப்பீடு செய்து அதற்கான Stamp Duty penalty செலுத்தும்பொருட்டு மேற்படி ஆவணத்தினை மதிப்பீடு செய்யவேண்டும் என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளதை கருத்திற்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை எதுவும் மாறப்போவதில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் தரப்பை நிரூபிப்பதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்று நீதிமன்றம் கருதுகிறது.

7. முடிவாக, மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

*Sd/-.S.Padmavathi,*
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

*Sd/-.S.Padmavathi,*
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.223/2025

இன்

அ.வ.எண்.31/2017

நாள்.27.11.2025